DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 24/2024** |
| Deposition of Witness for | : PW 8 |
| Name | : மந்திரமூர்த்தி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 15.05.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 15th **May** 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிவபுரிந்து தற்போதுபணிஓய்வு பெற்றுவிட்டேன். இதற்கு முன்பு நான் சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது அந்த காவல்நிலைய குற்ற எண்.113/2012 ச/பி.294(பி), 323, 353, 506(1) இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடைச்சட்டம் பிரிவு 4 ன் கீழ் பதிவு செய்துவைக்கப்பட்டிருந்த முதல் தகவல் அறிக்கையை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அதன்பிறகு 07.04.2012 ம் தேதி காலை 7.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்தை மைக்கேல் மற்றும் பாண்டி ஆகிய சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன. அதன்பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான இசக்கியரசன், மணி, ஆர்த்தி, மணிமேகலை, மைக்கேல், பாண்டிமற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் ராமகிருஷ்ணன் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம்

பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில், 1ம் எதிரி ஜான் என்ற ஜான்பாண்டியை 14.05.2012ம் தேதி 17.00 மணிக்கு முள்ளிக்குளம் பேருந்து நிறுத்ததில் வைத்து கைது செய்து எதிரியை தக்க வழிக்காவலுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 2ம் எதிரி திருநெல்வேலி அமர்வு நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அருள்செல்வி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரிடமிருந்து காயம்பட்ட நபருக்கான காயச்சான்றிதழை பெற்றேன். இவ்வழக்கின் முதல் விசாரணையை நான் முடித்து வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக நான் நிலையத்தில் ஒப்படைத்தேன். பின்னர் வழக்கு கோப்பை மேல்விசாரணைக்கு உதவி ஆய்வாளர் செல்வி எடுத்துக்கொண்டார். உதவி ஆய்வாளர் செல்வியின் கையொப்பம் எனக்கு தெரியும். அதனால் அவரது சார்பாகவும் இவ்வழக்கில் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் செல்வி நான் விசாரித்த சாட்சிகளை மீண்டும் விசாரித்தபோது, அவர்கள் என்னிடம் கூறியதுபோல அவரிடமும் கூறியதால் அவர்களது மறு வாக்குமூலத்தை அவர் பதிவு செய்யவில்லை. வழக்கு விசாரணை முடித்து 12.06.2012ம் தேதி உதவி ஆய்வாளர் செல்வி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 காவல்நிலையத்தில் புகார்மனு கொடுக்க வந்தபோது அவருடன் ஆர்த்தி மற்றும் மணிமேகலை ஆகிய சாட்சிகளும் உடன் வந்ததாகதான் அரசு தரப்பு வழக்கு என்றால் சரிதான். அ.சா.1 புகார்மனுவில் ஆர்த்தி மற்றும் மணிமேகலை ஆகியோர்கள் பெயர்கள் குறிப்பிட்டு தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 அளித்த புகார்மனுவில் ஜான் என்ற நபரும், அவருடன் பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய 23 வயது மதிக்கத்தக்க மற்றொரு நபரும் தான் குற்ற செயல்களை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய நபராக புகார்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர் எதிரி அந்தோணிதான் என்று தெரிவித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையை தவிர்த்து மேற்கண்ட இரு நபர்களும் ஒருவர்தான் என்று காண்பிக்கும் வேறு ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார்மனுவில் கண்டுள்ள 23 வயது மதிக்கத்தக்க நபர் எதிரி அந்தோணிதான் என்பதைஊர்ஜிதம் செய்து கொள்ள அரசு தரப்பு பட்டியல் சாட்சி 1 முதல் 4 வரையிலான சாட்சிகளை அழைத்து அடையாள அணிவகுப்பு நடத்தினேனா என்றால் இல்லை. அரசு தரப்பு

சாட்சிகளை நான் விசாரித்த அன்றே அவர்களது வாக்குமூலங்களையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றால் சரிதான். நான் பதிவு செய்த அரசு தரப்பு பட்டியல்சாட்சிகளின் வாக்குமூலங்கள் 11.07.2014ம் தேதி தான் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது என்றால் சரிதான். 11.07.2014 அன்றுதான் குற்ற இறுதி அறிக்கையும் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவர் அருள்செல்வி என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் இசக்கியரசனின் கழுத்து நெறிக்கப்பட்டதாக குறிப்பிட்டு அவர் எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மருத்துவர் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில்மேற்படி இசக்கியரசனுக்கு நடு முதுகில் காயம் இருந்ததாக கூறினாரா என்றால் இல்லை. அ.சா.ஆ.3 காயச்சான்றிதழில் எந்த நபர் எங்கு அடித்து இசக்கியரசனுக்கு எந்த உடல் பகுதியில் காயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 இசக்கியரசன் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் தான்பேருந்தில் பயணம் செய்தபோது 2 பெண்கள் என்னை அழைத்ததாகவும் அவர்களிடம் என்ன என்று கேட்டபோது அவர்கள் தங்களது இடுப்பை எதிரிகள் கிள்ளிவிட்டதாக தன்னிடம் கூறினார்கள் என்றும், கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் மேற்படி பெண்களிடம் பேருந்தின் ஓட்டுனர் தான் தவறாக நடந்து கொண்டார் என்று தெரிய வந்ததாக கூறினாரா என்றால் இல்லை. அ.சா.1 என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் எதிரிகளின் பெயர்களை பேருந்தில் பயணித்த பயணிகளிடமிருந்து கேட்டு தெரிந்து கொண்டதாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.2 மணி என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் 2 பெண் பயணிகள் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், அவர்கள் சத்தம் போட்டார்கள் என்றும், அவர்கள் சத்தம் போடவும் மணி நடத்துனரை அழைத்து படியிலிருந்தவர்களை மேலே வருமாறு கூறச்சொன்னார் என்றும், தெரிவித்துள்ளாரா என்றால் இல்லை. அ.சா.2 மணி என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் நடத்துனரின் சட்டை யை பிடித்து 2 எதிரிகளும் அவர்களை கீழே தள்ளினார்கள் என்று கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.2 எனது வாக்குமூலத்தில் அவர் பேருந்தை விட்டு இறங்கி பார்த்தபோது நடத்தனரின் கழுத்தில் எதிரிகள் நகம் பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டிருந்தது என்று கூறினாரா என்றால் இல்லை. அ.சா.2 என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் அ.சா.1ஐ எதிரிகள் இருவரும் பேருந்தின் முன் வாசலில் வைத்து தாக்கியதாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.2 என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் தான் எதிரிகளை சத்தம் போட்டும் அவர்கள் கேட்காததால் நடத்துனரை அழைத்து பேசசொன்னதாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. சம்பவம்

நடந்ததாக சொல்லப்படும் நாளன்று சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பேருந்தில் அரசு தரப்பு சாட்சிகள் 1 முதல் 4 உள்ளவர்களை தவிர்த்து வேறு நபர்கள் பயணம் செய்தார்கள் என்றால் செய்தார்கள். அரசு தரப்பு சாட்சிகள் 1 முதல் 4 வரையுள்ளவர்களை தவிர்த்து சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக பேருந்தில் பயணித்த வேறு எந்த நபரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.5 மற்றும் அ.சா.6 சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளன்று சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பேருந்தில் பயணித்தார்கள் என்பதை காண்பிக்கும் வகையில் அவரது பயணச்சீட்டை நான் விசாரணையின் போது நான் பெற்றேனா என்றால் இல்லை. TN72M1170 என்ற பதிவெண் கொண்ட அரசுபேருந்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளன்று திருநெல்வேலியிலிருந்து சுரண்டை வழியாக புளியங்குடி சென்றது என்பதை நிரூபிக்கும் வகைக்கு மேற்படி பேருந்தின் டிப்போ மேலாளரிடமிருந்து ஆவணம் எதுவும் பெற்றேனா என்றால் இல்லை. மேற்படி மேலாளரை நான் விசாரிக்கவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் முறையே அரசு பேருந்தின் ஓட்டுனர் மற்றும் நடத்துனர் என்பதை காண்பிக்கும் ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் கூறிய நாள் மற்றும் நேரத்தில் வழக்கு கோப்பை விசாரணைக்கு நான் எடுத்துக் கொள்ளவில்லை என்றாலும், சமப்வம் இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்செய்யவில்லை என்றாலும், அரசு தரப்பு பட்டியல் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், காயம்பட்ட நபருக்கான காயச்சான்றிதழை பெறவில்லை என்றாலும், 1ம் எதிரியை நான் முதல் விசாரணையில் கூறிய நாள் மற்றும் நேரத்தில் கைது செய்யவில்லை என்றாலும், 07.04.2012ம் தேதி நான் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலலும், 11.07.2014ம் தேதி தான் சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர் என்றாலும், அன்றை தினமே முழு விசாரணை முடியாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் புகார்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 23 வயது மதிக்கத்தக்க நபர் 2ம் எதிரி இல்லை என்றாலும் சரியல்ல. 1ம் எதிரிக்கும் பேருந்து நடத்துனருக்கும் இடையில் சில்லறை வாங்குவது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு பொய்புகார் கொடுக்கப்பட்டது என்றாலும், அதனடிப்படையில் பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும், எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**